Ours bank with
Bank of Baroda

மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 301 உள்ளூர் - 30.10.2026 வெள்ளிக்கிழமை விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com
Madurai Edition *Vol 55 * Issue 301 வெளியூர் - 31.10.2026 சனிக்கிழமை Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

குபேரனின் அருள் கொட்டும் 5 ராசிகள்!

மின்வாரியத்தில் 500 பயிற்சி பணியிடங்கள்!

மின்சார சேமிப்புக்கு புதிய கொள்கை!

பத்திரபதிவு; தட்கல் பிரீமியம் உயர்வு?

முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில் குடியரசு துணைத் தலைவர் மரியாதை!

ராமநாதபுரம், அக். 30–

ராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் உள்ள முத்துரா மலிங்கத் தேவர் நினைவிடத்தில் குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், ஆளுநர் ஆர்.வி. ஆர்லேகர் அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இதற்காக தில்லியிலிருந்து தனி விமானம் மூலம் மதுரை விமான நிலையம் வந்தடைந்த சி.பி. ராதாகிருஷ்ணன், அங்கி ருந்து ராணுவ ஹெலிகாப்டர் மூலம் பசும்பொன் வந்தடைந்தார்.

முத்துராமலிங்கத் தேவருக்கு மரியாதை செலுத்திய பிறகு செய்தியாளர்களை சந்தித்த சி.பி. ராதாகிருஷ்ணன்,

“நேதாஜி சுபாஸ் சந்திரபோஸின் மனதில் இடம்பிடித்தது மட்டுமின்றி, அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டு நாட்டின் விடுதலைக்காக வாழ்நாள் முழுவதும் உழைத்தவர். தனது கொள்கையில் சிறிது சமரசம் செய்து கொண்டிருந்தாலும் தமிழ்நாட்டின் முதல்வராக முத்துராமலிங்கத் தேவர் அமர்ந்திருப்பார். தனது கொள்கைக்கு எதிராக எவ்வித சமரசமும் செய்துகொ ள்ளாதவர். தனது வாழ்நாள் முழுவதும் நேர்மை, கண்ணியத்துடன் வாழ்ந்தவர். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்தவர். மீனாட்சி யம்மன் கோவிலில் தாழ்த்த ப்பட்ட மக்களை அனுமதிக்க தொடர் போராட்டம் நடத்தி வெற்றி கண்டவர். மகத்தான தேசிய தலைவர் முத்துராமலிங்கத் தேவர்” எனத் தெரிவித்தார்.

குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணனின் வருகையை ஒட்டி, மதுரை, பசும்பொன் கிராமத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இன்று மாலை வரை ட்ரோன் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

முத்துராமலிங்கத் தேவரின் லட்சியப் பாதையில் தொடர்ந்து பயணிப்போம்! முதல்வர் விஜய்!

சென்னை, அக். 30–

முத்துராமலிங்கத் தேவரின் லட்சியப் பாதையில் தொடர்ந்து பயணிப்போம் என்று முதல்வர் ஜோசப்விஜய்வெள்ளிக்கிழமை பதிவிட்டுள்ளார்.

இந்த நிலையில், சென்னை நந்தனத்தில் உள்ள முத்துராமலிங்கத் தேவரின் சிலைக்கு முதல்வர் ஜோசப் விஜய் மாலை அணிவித்து, மலர் தூவி இன்று காலை மரியாதை செலுத்தினார்.

“தேசியத்தையும், தெய்வீகத்தையும் தனது இரு கண்களாகப் போற்றி வாழ்ந்த சுதந்திரப் போராட்ட வீரர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் பிறந்த நாள் மற்றும் குருபூஜை நாளில், அவரது நாட்டுப்பற்றையும், தியாகத்தையும், சமூகநீதிக்கான பங்களிப்பையும் போற்றி வணங்குகிறேன்.

வீரம் செறிந்த தனது பேச்சாற்றலால், நாட்டு மக்களிடையே சுதந்திரக் கனலை மூட்டிய தெய்வீகத் திருமகனார் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் கொள்கைகளைத் தீவிரமாகப் பரப்பி, இந்திய தேசிய இராணுவத்திற்கு ஆதரவைத் திரட்டி, நாட்டின் விடுதலைக்காகப் போராடினார்.

10 மற்றும் பிளஸ்-2 மாணவர்களுக்கு விருது- கல்வி ஊக்கத் தொகை: முதலமைச்சர் விஜய் சென்னையில் 4-ந்தேதி வழங்குகிறார்!

சென்னை, அக். 30–

தமிழக வெற்றிக் கழகம் சார்பில் 10–ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 பொதுத்தேர்வில் சட்டமன்ற தொகுதி வாரியாக முதல் 3 இடங்களை பிடித்த மாணவ – மாணவிகளுக்கு கல்வி விருது மற்றும் ஊக்கத் தொகை வழங்கும் விழா சென்னையில் வருகிற 4–ந் தேதி நடைபெற உள்ளது.

இதில் முதலமைச்சர் விஜய் பங்கேற்று கல்வி விருது மற்றும் ஊக்கத் தொகை வழங்க உள்ளார்.

தமிழக வெற்றிக் கழகம் சார்பில் 10–ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 பொதுத்தேர்வில் சட்டமன்ற தொகுதி வாரியாக முதல் 3 இடங்களை பிடிக்கும் மாணவ – மாணவிகளுக்கு ஆண்டு தோறும் கல்வி விருது மற்றும் ஊக்கத்தொகை வழங்கும் விழா நடைபெற்று வருகிறது. இந்த விழா கடந்த 2023–ம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது.

இந்த விழாவில் கட்சி தலைவர் விஜய் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கல்வி விருதுகள் மற்றும் ஊக்கத்தொகைகளை வழங்கி வருகிறார். இதில் சட்டமன்ற தொகுதிகள் வாரியாக பல்வேறு கட்டங்களாக மாணவர்களுக்கு கல்வி விருது, சான்றிதழ் மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த முறை விருது பெற்ற 10–ம் வகுப்பு மாணவர்கள் மேடையில் பேசும்போது, ‘இந்த முறை த.வெ.க. தலைவர் விஜய்யிடம் கல்வி விருது பெறுகிறோம். அடுத்த முறை விருது பெறும் போது முதலமைச்சர் விஜய்யிடம் விருது பெறுவோம்’ என்று பேசினார்கள். அதன்படி கடந்த சட்டசபை தேர்தலில் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் ஆட்சியை பிடித்தது. விஜய் முதலமைச்சர் ஆனார்.

இந்த நிலையில் விஜய் முதலமைச்சர் ஆன பிறகு முதல் முறையாக 10–ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 மாணவ–மாணவிகளுக்கு கல்வி விருது மற்றும் ஊக்கத்தொகை வழங்க உள்ளார். பல கட்டங்களாக இந்த நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இதற்காக தொகுதிகள் வாரியாக முதல் 3 இடங்களை பிடித்த மாணவ – மாணவிகள் மற்றும் சிறப்பிடம் பிடித்த மாணவ–மாணவிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

முதல் கட்டமாக சட்டமன்ற தொகுதி வாரியாக 10–ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 மாணவ–மாணவிகளுக்கு த.வெ.க. சார்பில் கல்வி விருது மற்றும் ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சி சென்னை நீலாங்கரையில் உள்ள ஆர். கே. கன்வென்ஷன் மையத்தில் வருகிற 4–ந்தேதி (புதன்கிழமை) காலையில் நடைபெற உள்ளது.

முதல் கட்டமாக அரியலூர், கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள சட்டமன்ற தொகுதிகளை சேர்ந்த மாணவ –மாணவிகளுக்கு ஊக்கத்தொகை மற்றும் பரிசுகளை முதலமைச்சர் விஜய் வழங்க உள்ளார்.

இந்த விழாவில் பங்கேற்பதற்கான அனுமதி டோக்கன் இன்று த.வெ.க. தலைமை அலுவலகத்தில் வழங்கப்பட்டது. 5 மாவட்டங்களை சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் மற்றும் மாவட்ட செயலாளர்களிடம் விழாவில் பங்கேற்பதற்கான டோக்கன்களை அமைச்சர் என்.ஆனந்த் வழங்கினார்.

இந்த டோக்கன்களை எம்.எல்.ஏ.க்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள், விருது பெற உள்ள மாணவ –மாணவிகளை சந்தித்து வழங்குகிறார்கள். இந்த விருது வழங்கும் விழாவில், விருது பெற உள்ள மாணவ–மாணவிகளுடன் அவர்களின் பெற்றோர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொள்கிறார்கள்.

மேலும் விருது பெறுவதற்காக மாணவ–மாணவிகளை அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளையும் மாவட்ட செயலாளர்கள் தொடங்கியுள்ளனர். விருது பெறும் மாணவ–மாணவிகளையும், அவர்களின் பெற்றோர்களையும் சென்னைக்கு அழைத்து வருவதற்கு தனி பஸ்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

சென்னை வந்ததும் அவர்களுக்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் நொறுக்கு தீனிகளும் வழங்கப்பட உள்ளன. முதல் கட்ட விருது வழங்கும் விழா வருகிற 4–ந்தேதி நடைபெறும் நிலையில், தொடர்ந்து 2–வது மற்றும் 3–வது கட்டமாக விருது வழங்கும் விழா நடைபெற உள்ளது.

கடந்த 3 ஆண்டுகளாக நடைபெற்ற விழாக்களில் த.வெ.க. தலைவராக விஜய் கல்வி விருது மற்றும் ஊக்கத்தொகை வழங்கிய நிலையில், இந்த ஆண்டு முதலமைச்சராக விருது வழங்க உள்ள விஜய்யை காண 10–ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 மாணவர்களும், அவர்களின் பெற்றோரும் ஆர்வமாக உள்ளனர்.

கச்சா எண்ணெய் விலை வெடிப்பு!

118 டாலராக எகிறியதால் அதிர்ச்சி!

ஹார்முஸ் முடக்கம்: உலகமே திணறல்!

இந்தியாவில் விலைவாசி உயரும் பேராபத்து!!

புதுடெல்லி, அக்.30–

மத்திய கிழக்கில் அதி கரித்து வரும் போர் பதற்றம் காரணமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிரடியாக உயர்ந்துள்ளது. பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை பேரலுக்கு 118 டாலரை எட்டியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஈரான் கட்டுப்பாட்டால் ஹார்முஸ் கடல்வழிப் பாதையில் ஏற்பட்டுள்ள தடைகள், ரஷ்ய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மீது உக்ரைன் நடத்தும் தாக்குதல்கள் ஆகியவற்றால் உலகளவில் எரிபொருள் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே சவுதி அரேபியாவின் எண்ணெய் நிலையங்கள் மற்றும் குழாய்கள் மீது ஹவுதி படையினர் நடத்தும் தாக்கு தல்களும் நெருக்கடியை அதி கரித்துள்ளன. அமெரிக்கத் தேர்தலுக்குப் பின்னர் ஈரான் மீதான தாக்குதல் தீவிரமடையக்கூடும் என்ற அச்சத்தால் உலக நாடுகள் முன்கூட்டியே கச்சா எண்ணெயைக் கொள்முதல் செய்து வருகின்றன. இதனால் பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை 2.5 சதவீதம் உயர்ந்து 118 டாலராகவும், அமெரிக்க WTI எண்ணெய் விலை 2.3 சதவீதம் உயர்ந்து 104 டாலராகவும் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

அக்டோபர் மாதத்தில் மட்டும் பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை 12 சதவீதம் உயர்ந்து ஆறு மாத உச்சத்தைத் தொட்டுள்ளது. இதன் தாக்கத்தால் இந்தியாவில் பெட்ரோல், டீசல், விமானக் கட்டணம், சரக்குப் போக்குவரத்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பால், காய்கறிகள் முதல் வீடுகளுக்கு விநியோகிக்கப்படும் பொருட்கள் வரை விலை உயரக்கூடும் என்பதால் பொதுமக்கள் மத்தியில் கவலை அதிகரித்துள்ளது. உலகளாவிய பணவீக்கம் மேலும் அதிகரிக்கும் அபாயமும் உருவாகியுள்ளது.

தீபாவளி அதிரடி! ரூ.200-க்கு 10 மளிகைப் பொருட்கள்!

சென்னை, அக்.30–

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, பொதுமக்களின் செலவுச் சுமையைக் குறைக்கும் வகையில், தமிழக அரசு கூட்டுறவு அங்காடிகள் மூலம் 10 வகையான அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய சிறப்புத் தொகுப்பை ரூ.200–க்கு விற்பனை செய்ய ஏற்பாடு செய்துள்ளது.

சென்னையில் உள்ள கூட்டுறவு பல்பொருள் அங்காடிகள் மற்றும் கூட்டுறவு விற்பனை மையங்களில் அக்டோபர் 30 முதல் இத்தொகுப்பு விற்பனை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகுப்பில் கடலைப் பருப்பு, பாசிப் பருப்பு, உளுந்தம்பருப்பு, மிளகாய், தனியா, பூண்டு, புளி, கடுகு, சீரகம், சோம்பு ஆகிய 10 பொருட்கள் இடம்பெற்றுள்ளன.

ஒரு நபருக்கு ஒரு மளிகைத் தொகுப்பு என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். இதனை வாங்குவதற்கு குடும்ப அட்டை, ஆதார் அட்டை உள்ளிட்ட எந்த ஆவணங்களும் தேவையில்லை.

தீபாவளிப் பண்டிகை முடியும் வரை, கையிருப்பைப் பொறுத்து இத்தொகுப்பு விற்பனை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிச்சந்தையில் மளிகைப் பொருட்களின் விலை அதிகரித்துள்ள நிலையில், அரசின் இந்தச் சிறப்புத் திட்டம் ஏழை, எளிய மற்றும் நடுத்தரக் குடும்பங்களுக்குப் பயனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொதுமக்கள் அருகிலுள்ள கூட்டுறவு அங்காடிகளை அணுகிப் பயன்பெறலாம்.

பசும்பொன் தேவர் நினைவிடத்தில் மு.க.ஸ்டாலின் மரியாதை!

ராமநாதபுரம், அக். 30–

ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் உள்ள தேவரின் நினைவிடத்தில் அவரின் திருவுருவச் சிலைக்கு திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் குரு பூஜையையொட்டி ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் கிராமத்தில் உள்ள அவரது நினைவிடத்தில் ஏராளமானோர் மரியாதை செலுத்தி வருகின்றனர். இந்நிலையில் முத்துராமலிங்கத் தேவரின் பிறந்த நாள் மற்றும் குருபூஜையையொட்டி திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், மதுரை கோரிப்பாளையத்தில் உள்ள தேவரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து பசும்பொன் சென்ற மு.க.ஸ்டாலின், அங்கு தேவரின் நினைவிடத்தில் குருபூஜையில் கலந்துகொண்டு தேவரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். திமுக முன்னாள் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, மூர்த்தி, முன்னாள் எம்எல்ஏக்கள், திமுக நிர்வாகிகள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

தலையங்கம் மதுரை மணி
வெள்ளிக்கிழமை 30.10.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஐப்பசி மாதம் 13-ம் தேதி

வன்முறைக்கு அரசு வேலையா?

ஜனநாயகத்தின் உயிர்நாடி கருத்துச் சுதந்திரம். அதன் அடித்தளம் சட்டத்தின் ஆட்சி. கருத்து வேறுபாடுகளை விவாதங்களால் எதிர்கொள்வதே ஜனநாயகத்தின் மாண்பு. அதற்கு மாறாக, வன்முறையின் மூலம் ஆட்சி முறையை மாற்ற முயல்வது அரசியலமைப்புச் சட்டம் வகுத்துள்ள ஜனநாயக நடைமுறைகளுக்கு முரணானது.

இந்தப் பின்னணியில், உத்தரப் பிரதேச அரசு வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் புதிய அரசு வேலை வாய்ப்பு சரிபார்ப்பு உத்தரவு நாடு முழுவதும் விவாதிக்கப்பட வேண்டிய முக்கியமான அம்சங்களை முன்வைக்கிறது.

அலகாபாத் உயர் நீதிமன்ற வழிகாட்டுதலின் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்த உத்தரவின்படி, வன்முறை மூலம் தற்போதைய ஆட்சி முறையை மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட அமைப்புகளில் செயல்படுவோரின் அரசு வேலைவாய்ப்புத் தகுதி ஆய்வு செய்யப்படும்.

அதேநேரத்தில், ஒருவருடைய அரசியல் கொள்கை, சித்தாந்தம் அல்லது வழக்குப்பதிவு ஆகியவற்றை மட்டும் காரணமாகக் கொண்டு வேலைவாய்ப்பை மறுக்க முடியாது என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். குற்றம் நிரூபிக்கப்படுவதற்கு முன்பே ஒருவரைக் குற்றவாளியாகக் கருதக்கூடாது. அதேபோன்று, அரசுப் பணியில் சேருபவர்களின் நேர்மை, ஒழுக்கம், சட்டத்திற்கு உட்பட்ட செயல்பாடு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதும் அவசியம்.

அரசு வேலை என்பது வெறும் சம்பளப் பதவி அல்ல!

அரசு ஊழியர் என்பவர் அரசாங்கத்தின் பிரதிநிதி மட்டுமல்ல; பொதுமக்களின் நம்பிக்கையைச் சுமந்து நிற்பவர்.

சட்டத்தை அமல்படுத்த வேண்டிய பொறுப்பில் இருப்பவரே சட்டத்தை மதிக்காதவராக இருந்தால், பொதுமக்கள் அரசின் மீது எவ்வாறு நம்பிக்கை வைப்பார்கள்?

அதேநேரத்தில், அரசை விமர்சிப்பதும், அமைதியான முறையில் போராட்டம் நடத்துவதும், ஆட்சிமாற்றத்தை ஜனநாயக வழியில் வலியுறுத்துவதும் குடிமக்களின் உரிமைகள். அவற்றை வன்முறையுடன் தொடர்புபடுத்தி வேலைவாய்ப்பை மறுப்பது அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் குறித்த கேள்விகளை எழுப்பும்.

எனவே, வன்முறைச் செயல்களில் உண்மையான தொடர்பு உள்ளதா என்பதை ஆதாரங்களுடன் ஆய்வு செய்வதும், சம்பந்தப்பட்ட நபருக்கு விளக்கமளிக்கும் வாய்ப்பு வழங்குவதும் இன்றியமையாதவை.

இந்தியாவின் அனைத்து அரசுகளுக்கும் ஒரு முக்கியமான சிந்தனை!

மத்திய அரசும் அனைத்து மாநில அரசுகளும் அரசு வேலைவாய்ப்பு சரிபார்ப்பு நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மை, ஒரே மாதிரியான நியாயமான அளவுகோல்கள், காலவரையறை ஆகியவற்றை உறுதிப்படுத்துவது குறித்து பரிசீலிக்க வேண்டும்.

அரசுப் பணிக்கு விண்ணப்பிப்பவர்களின் பின்னணியை ஆய்வு செய்யும்போது அரசியல் சார்பு, சாதி, மதம், மொழி அல்லது தனிப்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாகப் பாகுபாடு ஏற்படக்கூடாது.

வன்முறை, பொதுச் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தல், குற்றச் செயல்களில் நேரடிப் பங்கேற்பு போன்றவை குறித்து சட்டபூர்வமான ஆதாரங்களின் அடிப்படையில் மட்டுமே முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

மேலும், கடந்த காலத்தில் தவறு செய்த ஒருவர் பின்னர் திருந்தியிருந்தால், அவரது தற்போதைய நடத்தை மற்றும் சட்ட நிலையை மதிப்பிடுவதற்கும் உரிய இடம் இருக்க வேண்டும்.

போலீஸ் சரிபார்ப்பால் வேலைவாய்ப்பு முடங்கக்கூடாது!

அரசுப் பணிக்குத் தேர்வாகிய இளைஞர்கள் பலர் பணி நியமனத்திற்காகக் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. சரிபார்ப்பு நடைமுறைகள் தேவையற்ற காலதாமதத்தை உருவாக்காத வகையில் இருக்க வேண்டும்.

உத்தரப் பிரதேச அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 30 நாள் போலீஸ் சரிபார்ப்பு காலவரையறை, தற்காலிக பணி நியமனம், சுயசான்று நடைமுறை போன்ற அம்சங்கள் நிர்வாகச் சீர்திருத்த விவாதத்திற்குப் பயன்படக்கூடியவை.

அதேநேரத்தில், தவறான தகவல் அளித்தவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளும் சட்டப்படியான விசாரணை மற்றும் மேல்முறையீட்டு வாய்ப்புகளுடன் அமைய வேண்டும்.

தண்டனை மட்டுமல்ல; திருந்துவதற்கும் வாய்ப்பு வேண்டும்!

சட்டத்தின் நோக்கம் குற்றங்களைத் தடுப்பது மட்டுமல்ல; சமூகத்தில் பொறுப்புணர்வையும் உருவாக்குவதாகும்.

ஒருவரின் கடந்தகாலச் செயல்பாடுகளை நிரந்தரமான தகுதியிழப்பாக மாற்றுவது நியாயமானதா? திருந்திய ஒருவருக்கு மீண்டும் வாய்ப்பளிப்பதற்கான அளவுகோல் என்ன? இத்தகைய கேள்விகளுக்கும் அரசுகள் தெளிவான பதில்களை உருவாக்க வேண்டும்.

அரசுப் பணியில் ஒழுக்கமும் நேர்மையும் தேவை என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், அந்த ஒழுக்கத்தை உறுதிப்படுத்தும் நடைமுறைகளே நீதிக்கும் சமத்துவத்திற்கும் உட்பட்டதாக இருக்க வேண்டும்.

வன்முறையைத் தடுப்பது அரசின் கடமை; கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதும் அதே அரசின் கடமை!

இந்த இரண்டிற்கும் இடையே சமநிலையை ஏற்படுத்தும் கொள்கைகளே மக்களின் நம்பிக்கையைப் பெறும்.

அரசு வேலை என்பது அதிகாரத்தின் அடையாளம் அல்ல; மக்களுக்குச் சேவை செய்யும் பொறுப்பு. அந்தப் பொறுப்புக்கு நேர்மையானவர்களைத் தேர்ந்தெடுப்பதோடு, எந்த நிரபராதிக்கும் அநீதி இழைக்கப்படாமல் பாதுகாப்பதே உண்மையான நல்லாட்சியின் அடையாளம்!

ஆசிரியர்,
மதுரை மணி நாளிதழ்

ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் தூய்மை பணிகள்!

ஒட்டன்சத்திரம். அக். 30–

காயகல்ப நடவடிக்கைகள் (தூய்மை மற்றும் சுகாதாரம்) தொடர்பான ஒரு நாள் இந்தியா முழுவதும் நடைபெற்றது.

அதன்படி திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில்காயகல்ப நடவடிக்கைகள் (தூய்மை மற்றும் சுகாதாரம்) தொடர்பான பணிகள் நடைபெற்றது. இப்பணியில் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் டாக்டர். ப. கருப்புச்சாமி, ஒட்டன்சத்திரம் நகர்மன்ற தலைவர் க. திருமலைச்சாமி இந்திய மருத்துவ சங்க செயலாளர் டாக்டர்.ஏ. ஆசைத்தம்பி, இந்திய செஞ்சிலுவை சங்க மாவட்ட செயற்குழு உறுப்பினர் டி.ஹெரால்டு ஜாக்சன், மருத்துவமனை செவிலியர் கண்காணிப்பாளர் மணிமேகலை மற்றும் செவிலி யர்கள் தூய்மை பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்ட னர்.

கரூர் அப்போலா மருத்துவனையில் மேம்படுத்த பட்ட பக்கவாத சிகிச்சையை வலுப்படுத்தும் நோக்கில் பிரத்யேக பக்கவாத சிறப்பு பிரிவினை விகே பாலிமர் சேனல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் திரு கருப்பண்ணன் ஆறுமுகம் குத்துவிளக்கு ஏற்றி வைத்தார்.இதில் அப்போலா மருத்துவமனை தலைமைநிர்வாக அதிகாரி நிகில் திவாரி பிரிவு தலைவர் டாக்டர் கற்பக வள்ளி டாக்டர் சரவணன் அறுவை சிகிச்சை பிரிவு நிபுணர் தமிழானந்த் தீவிர சிகிச்சை பிரிவு டாக்டர் ஐஸ்வர்யா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

திமுக முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்ட 8 பேர் மீது ஊழல் தடுப்புத்துறை வழக்குப்பதிவு!

சென்னை, அக். 30–

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் 2,538 பணியிடங்களுக்கு ஊழியர்களை நியமித்ததில் முறைகேடுகள் நடைபெற்றதாக எழுந்த புகாரின் அடிப்படையில், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்ட 8 பேர் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை வழக்குப்பதிவு செய்துள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பல்வேறு பிரிவுகளில் உதவிப் பொறியாளர், இளநிலைப் பொறியாளர், சுகாதார ஆய்வாளர், வரைவாளர் உள்ளிட்ட மொத்தம் 2,538 பணியிடங்களுக்கு ஆள்களைத் தேர்வு செய்து நியமித்ததில் ஊழல் மற்றும் முறைகேடுகள் நடைபெற்றதாகப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தகுதியற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து பெருமளவில் பணம் வசூலிக்கப்பட்டு, தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் அவர்கள் பணியமர்த்தப்பட்டதாகவும், இந்தப் பணப் பரிவர்த்தனைகள் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் ஹவாலா வழியாக மேற்கொள்ளப்பட்டதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த வழக்கின் விசாரணையின் ஒரு பகுதியாக, வியாழக்கிழமை சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், நாமக்கல், திருநெல்வேலி உள்ளிட்ட இடங்களில் கே.என். நேரு தொடர்புடைய மொத்தம் 25 இடங்களில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

இந்தச் சோதனையின்போது, வழக்கு விசாரணைக்குத் தொடர்புடைய 170 ஆவணங்கள் மற்றும் 13 மின்னணு ஆவணங்கள் அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆவணங்கள் அடிப்படையில் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்ட 8 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த விவகாரம் தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இடைத்தேர்தலில் சீமானுக்கு ஆதரவா? மு.க.ஸ்டாலின் பதில்!

ராமநாதபுரம், அக். 30–

இடைத்தேர்தலில் சீமானுக்கு ஆதரவா? என்ற கேள்விக்கு திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் பதிலளித்துள்ளார். அம்பாசமுத்திரம் இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் போட்டியிடுவதாக அறிவித்துள்ளார். அதேபோல இந்த இடைத்தேர்தலில் மற்ற கட்சிகள் ஆதரவளித்தால் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் கூறியிருந்தார்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் குரு பூஜையையொட்டி ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் கிராமத்தில் உள்ள அவரது நினைவிடத்தில் திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அப்போது செய்தியாளர்களுடன் பேசிய ஸ்டாலின், இடைத்தேர்தல் குறித்த கேள்விக்கு பதிலளித்தார்.

இடைத்தேர்தலில் சீமானுக்கு ஆதரவா? என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், "முதலில் தேர்தல் தேதி அறிவிக்கட்டும். அதன்பிறகு அதுபற்றி முடிவெடுப்போம்" என்று பதிலளித்துள்ளார் .

தமிழகத்தில் மதுராந்தகம், தாராபுரம் ஆகிய தொகுதிகளுக்கு சமீபத்தில் இடைத்தேர்தல் நடந்து முடிந்த நிலையில் மீதியுள்ள திருச்சி கிழக்கு, பெருந்துறை, அம்பாசமுத்திரம், விராலிமலை, கரூர் ஆகிய தொகுதிகளுக்கு விரைவில் இடைத்தேர்தல் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மின்சார சேமிப்புக்கு புதிய கொள்கை!

சென்னை, அக். 30–

தமிழகத்தில் சூரியசக்தி மற்றும் காற்றாலை மின் உற்பத்தியை அதிகரிக்கும் வகையிலும், உற்பத்தியாகும் மின்சாரத்தை பேட்டரிகளில் சேமித்து தேவைப்படும் நேரங்களில் பயன்படுத்தும் வகையிலும் புதிய திட்டம் கொண்டுவரப்படுகிறது. இதற்காக பல்வேறு சலுகைகளுடன் கூடிய 'தமிழக பேட்டரி ஸ்டோரேஜ் கொள்கைக்கு' தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தமிழகத்தில் காற்றாலை மற்றும் சூரியசக்தி மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தை அதிக திறன் கொண்ட பேட்டரிகளில் சேமித்து, மின்தேவை அதிகமாக இருக்கும் நேரங்களில் மீண்டும் பயன்படுத்தும் திட்டத்தை ஊக்குவிக்க மின்வாரியம் இந்தக் கொள்கையை உருவாக்கியுள்ளது. இதற்கு நேற்று நடைபெற்ற தமிழக அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளித்துள்ளதாக கூறப்படுகிறது. இந்த புதிய கொள்கையின்படி, தினமும் 2,500 மெகாவாட் மின்சாரத்தை பேட்டரிகளில் சேமித்து வைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சேமிக்கப்படும் மின்சாரத்தை தேவைப்படும்போது தொடர்ந்து 4 மணி நேரம் பயன்படுத்தும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

ஒரு மெகாவாட் மற்றும் அதற்கு மேற்பட்ட திறன் கொண்ட தற்போதைய சூரியசக்தி, காற்றாலை மின் திட்டங்களிலும் பேட்டரி கட்டமைப்புகளை ஏற்படுத்த ஊக்குவிக்கப்படும்.புதிதாக அமைக்கப்படும் சூரியசக்தி மின் நிலையங்கள் மற்றும் ஒரே இடத்தில் அமைக்கப்படும் காற்றாலை, சூரியசக்தி மின் திட்டங்களில் உற்பத்தித் திறனில் குறைந்தது 10 சதவீத அளவுக்கு பேட்டரி சேமிப்பு கட்டமைப்பு நிறுவப்பட வேண்டும். இந்த அமைப்பில் சேமிக்கப்படும் மின்சாரத்தை 4 மணி நேரம் வரை பயன்படுத்த முடியும்.

இந்த திட்டத்தின் கீழ் பேட்டரி சேமிப்பு கட்டமைப்புகளை அமைக்கும் தகுதியுள்ள நிறுவனங்களுக்கு பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி, திட்டம் நிறுவப்பட்ட நாளில் இருந்து 10 ஆண்டுகள் வரை 'டிரான்ஸ்மிஷன் சார்ஜ்' மற்றும் 'வீலிங் சார்ஜ்' கட்டணங்களில் 100 சதவீத விலக்கு அளிக்கப்படும். மேலும், மின்தேவை குறைவாக இருக்கும் நேரங்களில் கிடைக்கும் உபரி மின்சாரத்தை பேட்டரிகளில் சேமித்து வைத்து, மின்தேவை அதிகமாக இருக்கும் நேரங்களில் பயன்படுத்திக் கொள்ள முடியும்.இதன் மூலம் காற்றாலை மற்றும் சூரியசக்தி மின்சாரத்தை வீணாக்காமல் முழுமையாகப் பயன்படுத்துவதற்கு வழிவகை ஏற்படும்.

டி.சி.எஸ்., நிறுவனத்துக்கு சாதகமாக டெண்டர் விதிகள்?

சென்னை, அக். 30–

தமிழகத்தில் சொத்து விற்பனை உட்பட, பல்வேறு வகை பத்திரங்களை பதிவு செய்ய, 589 சார் – பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. இவற்றுக்கு வந்து செல்லும் மக்களுக்கு, போதிய வசதிகள் இல்லை என, தொடர்ந்து புகார்கள் வருகின்றன.

இந்நிலையில், 'ஸ்டார் 3.0' மென்பொருள் வருகையால், 'ஆன்லைன்' முறையில் பத்திரப்பதிவு மேற்கொள்ளும் வசதி வந்துள்ளது. இதனால், சார் – பதிவாளர் அலுவலகங்களை, நவீன முறையில் மேம்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இதை கருத்தில் வைத்து, தமிழகத்தில் முதல் கட்டமாக, 25 இடங்களில், தனியார் வாயிலாக, மாதிரி பத்திரப்பதிவு மையங்கள் அமைக்க, பதிவுத்துறை முடிவு செய்தது. இதற்கான நிறுவனத்தை தேர்வு செய்ய, 'டெண்டர்' கோரப்பட்டுள்ளது. சென்னை மண்டலத்தில், ஐந்து அலுவலகங்கள் உட்பட, 25 இடங்களில், 'ஏசி' வசதியுடன், கார்பரேட் அலுவலகம் போன்று, பத்திரப்பதிவு மையங்கள் வர உள்ளன. இதற்கான டெண்டரில் பங்கேற்போருக்கு விதிக்கப்பட்டுள்ள தகுதிகள், குறிப்பிட்ட நிறுவனத்துக்கு சாதகமாக உள்ளதாக புகார் எழுந்துள்ளது.

இது குறித்து, ஆவண எழுத்தர்கள் சிலர் கூறியதாவது: மாதிரி பத்திரப்பதிவு மையங்கள் அமைப்பதற்கான டெண்டரில், பாஸ்போர்ட் சேவை மையங்கள் நடத்துவது, ஒரு தகுதியாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், பாஸ்போர்ட் சேவை மையங்கள் நடத்தி வரும் டி.சி.எஸ்., நிறுவனம், இதில் முன்னுரிமை பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதில் போட்டியை குறைத்து, குறிப்பிட்ட நிறுவனத்துக்கு வாய்ப்பு அதிகரிக்கும் வகையில், விதிகள் அமைந்துள்ளன. தமிழக பதிவுத்துறையில், ஏற்கனவே, ஸ்டார் 2.0; ஸ்டார் 3.0 மென்பொருள்களை, டி.சி.எஸ்., நிறுவனம்தான் செயல்படுத்தி வருகிறது. இந்த பின்னணியில், தகுதி, அனுபவம் அடிப்படையில், டி.சி.எஸ்., நிறுவனத்துக்கு வாய்ப்பு அதிகரித்துள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

குபேரனின் அருள் கொட்டும் 5 ராசிகள்!

ஜோதிட சாஸ்திரத்தின்படி, செல்வம், புகழ், பொருளாதார முன்னேற்றத்தை வழங்கும் தெய்வமாக குபேரன் போற்றப்படுகிறார். குபேரனின் அருள் பெற்ற ராசிக்காரர்கள் வாழ்க்கையில் செல்வ வளமும் தொழில் முன்னேற்றமும் அடைவார்கள் என்பது நம்பிக்கை. குறிப்பாக ரிஷபம், கடகம், துலாம், விருச்சிகம், தனுசு ஆகிய ஐந்து ராசிகள் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

ரிஷபம்: சுக்கிரனை அதிபதியாகக் கொண்ட இவர்கள் நிதானமாகச் செயல்பட்டு பொருளாதார நிலைத்தன்மையைப் பெறுவார்கள். வங்கி, ரியல் எஸ்டேட், ஆடம்பரப் பொருட்கள் விற்பனை போன்ற துறைகளில் சிறந்து விளங்குவார்கள்.

கடகம்: சந்திரனை அதிபதியாகக் கொண்ட இவர்கள் குடும்பத்தின் மீது அதிக அன்பு கொண்டவர்கள். பல்வேறு வழிகளில் பணவரவு கிடைக்கும். நிதானமான முடிவுகளும் சேமிப்பும் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும்.

துலாம்: சுக்கிரன் மற்றும் குபேரனின் அருளால் வருமானம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. தன்னம்பிக்கை, கடின உழைப்பு, சமநிலையான அணுகுமுறை ஆகியவற்றால் தொழிலில் வெற்றி பெறுவார்கள்.

விருச்சிகம்: செவ்வாயை அதிபதியாகக் கொண்ட இவர்கள் தைரியமும் விடாமுயற்சியும் நிறைந்தவர்கள். கடினமான சூழல்களையும் சமாளித்து வேலை, தொழிலில் முன்னேறுவார்கள். திறமைகளை வளர்த்துக்கொள்வதால் வருமானம் உயரும்.

தனுசு: குருவை அதிபதியாகக் கொண்ட இவர்கள் ஆன்மிக ஈடுபாடும் தன்னம்பிக்கையும் உடையவர்கள். சிறந்த சிந்தனை, தலைமைத்துவம், பிறருக்கு உதவும் குணம் ஆகியவற்றால் நிதி முன்னேற்றம் அடைவார்கள்.

குபேரனுடன் மகாலட்சுமி, விநாயகரை வழிபடுவது செல்வ வளத்தைப் பெருக்கும் என்பது ஆன்மிக நம்பிக்கை. இருப்பினும், இவை ஜோதிட நம்பிக்கைகளின் அடிப்படையிலான பொதுவான பலன்களே தவிர, உறுதியான பொருளாதார முன்னறிவிப்புகள் அல்ல.

மாண்புமிகு கழக பொதுச்செயலாளர், புரட்சித்தமிழர் எடப்பாடியார்அவர்களின் வழிகாட்டலின்படி,கரூர் மாநகர தெற்கு பகுதி, 46–வது வட்டக் கழக நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டம்,செல்லாண்டி பாளையம் பகுதியில், வட்டக் கழக செயலாளர் .பழனிசாமிஏற்பாட்டில், மாநகர தெற்கு பகுதி கழக செயலாளர் லட்சுமணமூர்த்திதலைமையில், நடைபெற்றது. இக்கூட்டத்தில், கரூர் மாவட்ட கழக செயலாளர் திரு.K.கமலக்கண்ணன்அவர்கள் கலந்துகொண்டு, கழக வளர்ச்சிப் பணிகள் மற்றும் கரூர் சட்டமன்ற தொகுதி இடைதேர்தல் பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.இக்கூட்டத்தில் உடன் கரூர் மேற்கு பகுதி கழக செயலாளர் திரு.V.R.செல்வகுமார்அவர்கள் மற்றும் கட்சியினர் கலந்துகொண்டார்.

காவல்துறைக்கு மிரட்டல்: சேகர்பாபு நேரில் ஆஜர்!

சென்னை, அக். 30–



சென்னையில் காவல்துறையினரை மிரட்டியதாக திமுக முன்னாள் அமைச்சர் சேகர்பாபுவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

ரூ. 100 கோடி மோசடி செய்ததாக திமுக முன்னாள் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ், கடந்த வாரம் கைது செய்யப்பட்டார். அன்பில் மகேஸ் கைது நடவடிக்கையின்போது காவல்துறைக்கும் திமுக முன்னாள் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபுவுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இந்த நிலையில், வாக்குவாதத்தில் காவல்துறையினரை மிரட்டும் வகையில் சேகர்பாபு பேசியதாக அவர் மீது 2 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. மேலும், விசாரணைக்கு ஆஜராகுமாறு சேகர்பாபுவுக்கு சென்னை வேப்பேரி காவல்துறையினர் அழைப்பாணை விடுத்தனர்.

அழைப்பாணை விடுக்கப்பட்ட நிலையில் முன்னாள் அமைச்சர் சேகர்பாபு இன்று (அக். 30) நேரில் ஆஜரானார்.

கரூர் மாவட்டத்தின் 22வது மாவட்ட ஆட்சியராக ச.பிரசன்னா ராமசாமி பொறுப்பேற்றுகொண்டார். இங்கிருந்த திரு.சி. முத்துகுமரன் திருப்பூர் மாவட்ட ஆட்சியராக பணிமாறுதல் செய்யப்பட்டார்.

இனிப்புகளில் மின்னுவது வெள்ளியா? அலுமினியமா? மக்களே உஷார்!

பண்டிகைக் காலத்தில் இனிப்புக் கடைகளில் விற்பனை அதிகரித்து வருகிறது. குறிப்பாக முந்திரி பர்ஃபி, காஜு கத்லி உள்ளிட்ட இனிப்புகளின் மீது ஒட்டப்படும் வெள்ளி நிறப் படலம் வாடிக்கையாளர்களைக் கவர்கிறது. ஆனால், உண்மையான வெள்ளிக்குப் பதிலாக அலுமினியம் போன்ற மலிவான உலோகப் படலங்கள் பயன்படுத்தப்படலாம் என்ற எச்சரிக்கை எழுந்துள்ளது.

உணவுக்குப் பொருந்தாத கலப்பட உலோகங்கள் உடலில் சேரும்போது செரிமானக் கோளாறுகள் உள்ளிட்ட உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படக்கூடும். சில நச்சு உலோகங்கள் அதிக அளவில் உடலில் சேர்வது கல்லீரல், சிறுநீரகம் மற்றும் நரம்பு மண்டலத்தையும் பாதிக்கலாம்.

உண்மையான வெள்ளிப் படலம் மென்மையாகவும் எளிதில் நொறுங்கக்கூடியதாகவும் இருக்கும். அலுமினியப் படலம் சற்று உறுதியாக இருக்கலாம். அதிகப்படியான பளபளப்பும் சந்தேகத்தை ஏற்படுத்தலாம். இருப்பினும், நிறம், விரல்களால் தேய்த்தல், எரித்துப் பார்த்தல் போன்ற வீட்டுச் சோதனைகளால் படலத்தின் தூய்மையை உறுதிப்படுத்த முடியாது.

எனவே, பொதுமக்கள் நம்பகமான கடைகளில் மட்டுமே இனிப்புகளை வாங்க வேண்டும். உணவுப் பாதுகாப்புத் தரம், தயாரிப்பு விவரங்கள் ஆகியவற்றைக் கவனிக்க வேண்டும். சந்தேகத்திற்குரிய படலம் கொண்ட இனிப்புகளைத் தவிர்ப்பது நல்லது. இனிப்பின் அழகைவிட உடல்நலமே முக்கியம்! பண்டிகைக் கொண்டாட்டத்தில் குடும்பத்தினரின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க நுகர்வோர் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்.

வீத லீடர் சார்பில் தீபாவளி நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

திருப்பூர், அக் 30–

வீத லீடர்ஸ் சார்பில் தீபாவளி பண்டிகை முன்னிட்டு திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதி 16 வது வார்டில் நிர்வாகி சி முருகன் தலைமையில் நலத்திட்ட உதவிகளை வழங்கும் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது விழா முன்னிலை விகே பாலசுப்பிரமணியம் வரவேற்புரை பழனியப்பன் சிறப்பு விருந்தினர் தமிழ் இளங்கோ. பிரகாஷ் உள்ளிட்டோர் பங்கேற்று விழாவினை துவக்கி வைத்தனர் இதில் நூற்றுக்கும் மேற்பட்ட துப்புரவு பணியாளர்களுக்கு புதிய ஆடை இனிப்பு கார வகை உள்ளிட்டவைகளை அவர்களுக்கு வழங்கினார்கள் இந்த நிகழ்வில் மகளிர் அணியினர் மற்றும் வீதலீடர்ஸ் நிர்வாகிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்

படத்தின் ட்விஸ்டைக் கண்டுபிடித்தால் ரூ.1 கோடி பரிசு!

ஹைதராபாத், அக். 30–

தெலுங்கு இயக்குநர் பூர்வாஜ் இயக்கியுள்ள ‘கில்லர்’ திரைப்படம் இன்று (அக்.30) திரையரங்குகளில் வெளியாகிறது. சயின்ஸ் ஃபிக்சன் ஆக்ஷன் திரில்லராக உருவாகியுள்ள இப்படத்தில் அவரது மனைவி ஜோதி பூர்வாஜ் முதன்மைக் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். பூர்வாஜ், மணீஷ் கிலாடா உள்ளிட்ட பலரும் நடித்துள்ளனர்.

இந்நிலையில், படத்தின் இரண்டாம் பாதியில் இடம்பெறும் முக்கியத் திருப்பத்தைச் சரியாகக் கண்டுபிடிப்பவருக்கு ரூ.1 கோடி பரிசு வழங்கப்படும் எனப் படக்குழு அறிவித்துள்ளது.

இதற்காக அக்டோபர் 29ஆம் தேதி இரவு 10 மணிக்கு நடைபெற்ற சிறப்புக் காட்சியைப் பார்த்தவர்கள், இடைவேளைக்குப் பிறகு 5 நிமிடங்களுக்குள் கதையின் திருப்பத்தை ஒரே வரியில் எழுதி, திரையரங்க டிக்கெட் புகைப்படத்துடன் 7330608675 என்ற வாட்ஸ்அப் எண்ணுக்கு அனுப்ப வேண்டும் என இயக்குநர் தெரிவித்தார்.

போட்டி விதிகளின்படி ஒரு வெற்றியாளர் தேர்ந்தெடுக்கப்படுவார். படக்குழுவின் இந்த வித்தியாசமான அறிவிப்பு ரசிகர்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது.

ரூ.100 கோடி ஊழல்! சிரித்த முகத்துடன் ஆஜரான அன்பில் மகேஸ்!

சென்னை, அக். 30–

ரூ. 400 கோடி ஊழல் குற்றச்சாட்டு வழக்கில் ஊழல் தடுப்பு நீதிமன்றத்தில் திமுக முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் நேரில் ஆஜரானார்.

திமுக ஆட்சிக் காலத்தில் 1000–க்கும் மேற்பட்ட தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம், டிடிசிபி, சிஎம்டிஏ அனுமதி மற்றும் பிற சட்டப்பூர்வ அனுமதிகளைப் பெற்றுத் தருவதாககூறி, ரூ. 100 கோடிக்கு மேல் சட்டவிரோதமாக வசூலித்ததாக தனியார் பள்ளிகள் சங்கம் தரப்பில் புகார் அளிக்கப்பட்டது. இந்தப் புகாரில் விசாரணை நடத்திய சென்னை மத்திய குற்றப் பிரிவு போலீசார், முன்னாள் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ், தனியார் பள்ளிகள் சங்கத் தலைவர் பி.டி. அரசகுமார் உள்ளிட்டோருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கு தொடர்பாக அன்பில் மகேஸை கடந்த அக். 26 ஆம் தேதி சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீஸார் அதிரடியாக கைது செய்தனர்.

இதனிடையே, அன்பில் மகேஸை 5 நாள்கள் போலீஸ் காவலில் விசாரிக்கக் கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணைக்காக, புழல் சிறையில் இருந்து பலத்த பாதுகாப்புடன் ஊழல் தடுப்பு நீதிமன்றத்தில் அன்பில் மகேஸ் ஆஜர்படுத்தப்பட்டார்.

சிறையில் அன்பில் மகேஸுக்கு சிறப்பு உணவு வழங்க அனுமதி வழங்கப்பட்டிருக்கும் நிலையில், நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் சிறையில் முதல் வகுப்பும் முறையான உணவும் தரப்படவில்லை என நீதிமன்றத்தில் அன்பில் மகேஸ் தரப்பில் புகார் தெரிவித்தனர்.

மற்ற கைதிகளுக்கு வழங்கப்படும் சப்பாத்தி மட்டுமே சிறையில் உணவாக வழங்குவதால் அன்பில் மகேஸின் உடல் எடை குறைந்து விட்டதாகவும், அவரின் வீட்டில் தயாரிக்கப்படும் உணவை வழங்கக் கோரி மனு தாக்கல் செய்யவுள்ளதாகவும் அன்பில் மகேஸ் தரப்பில் தெரிவித்தனர்.

காங்கிரஸ் புதிய நிர்வாகிகள் சந்திப்பு!

திருப்பூர் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் செயலாளராக நியமனம் செய்யப்பட்டதற்கு நன்றி கூறும் விதமாகவும் மரியாதை நிமித்தமாகவும் மாவட்ட தலைவர் நல்லூர் கோபால்சாமி அவர்களையும், மாநில செயலாளர் டிடிகே சித்திக் அவர்களையும் கட்சி அலுவலகத்தில் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார் மாநகர் மாவட்ட செயலாளர் திருமதி சம்சாத் பேகம் அவர்கள் உடன் நிர்வாகிகள் உடன் இருந்தனர்

திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவராக திரு. சி. முத்துக்குமரன் பொறுப்பேற்றுக்கொண்டார்.

பழனியில் காங்கிரஸ் கமிட்டி சார்பாக, பழனி நகராட்சி காங்கிரஸ் கமிட்டி புதிய தலைராக பத்மினி முருகானந்தம் நியமனம், கட்சி நிர்வாகிகளும் உறவினர்களும் பாராட்டினர்.

10- வது -3 பாடங்கள் நீக்கம்! சி.பி.எஸ்.இ.

புதுடெல்லி, அக். 30–

2028–ஆம் ஆண்டு பொதுத்தேர்வு எழுதவுள்ள ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்குப் பெரும் நிம்மதி அளிக்கும் வகையில், மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (CBSE) தனது பாடத்திட்ட அமைப்பில் திருத்தம் செய்துள்ளது. இதன்படி, ‘சமூகத்தில் தனிநபர்கள்’ (Individuals in Society), ‘கணக்கீட்டுச் சிந்தனை (CT) மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) தொடர்பான தொகுதிகள்’ (Modules on Computational Thinking and AI), மற்றும் ‘சுற்றுச்சூழல் கல்வி’ (Environmental Education) ஆகிய மூன்று பாடங்கள் இனி பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்காது என்று தெளிவுபடுத்தியுள்ளது.அதிகாரிகளின் கூற்றுப்படி, தற்போதைய கல்வி ஆண்டுக்குப் பிறகு அறிமுகப்படுத்தப்பட்ட இந்தப் பாடங்கள் மாணவர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியதுடன், ஒன்பது முதல் பத்து பாடங்களைப் படிக்க வேண்டிய கூடுதல் சுமையையும் மாணவர்களுக்கு அளித்தன. தற்போது சி.பி.எஸ்.இ வாரியம் அளித்துள்ள விளக்கத்தின்படி, மாணவர்கள் பொதுத்தேர்வுக்காக ஐந்து பாடங்களில் மட்டும் கவனம் செலுத்தினால் போதுமானது; மற்ற பாடங்களை மதிப்பெண் பெறும் அழுத்தம் இன்றி அவர்கள் கற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டத்தின் கீழ், பொதுத்தேர்வுக்கான ஐந்து கட்டாயப் பாடங்களாக இரண்டு மொழிகள், கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் ஆகியவை அமையும். அதே சமயம், மாணவர்கள் மொத்தம் ஒன்பது கட்டாயப் பாடங்களைப் பயில வேண்டும்; இதில் மூன்றாவது மொழி, கலைக் கல்வி, உடற்கல்வி மற்றும் நல்வாழ்வு, மற்றும் தொழிற்கல்வி ஆகியவை அடங்கும்.

இதுதொடர்பாக பள்ளி முதல்வர்கள் மற்றும் பள்ளிகளின் தலைவர்களுக்கு சி.பி.எஸ்.இ வாரியம் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், “பாடத்திட்ட அறிமுகத்தை அதன் அமலாக்க கால அட்டவணையுடன் ஒருங்கிணைக்கும் நோக்கில், ஒன்பதாம் வகுப்பில் (2026–27) ‘சமூகத்தில் தனிநபர்கள்’ மற்றும் ‘கணக்கீட்டுச் சிந்தனை (CT) மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) தொடர்பான தொகுதிகள்’ ஆகிய பாடங்களும், பத்தாம் வகுப்பில் (2027–28) ‘சுற்றுச்சூழல் கல்வி’ பாடமும் இனி பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்காது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்கள் 2026–27 கல்வியாண்டில் ஒன்பதாம் வகுப்பில் பயின்று, 2027–28 கல்வியாண்டில் பத்தாம் வகுப்புக்குச் செல்லும் மாணவர்களுக்குப் பொருந்தும். 2026–27 கல்வியாண்டில் பத்தாம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு, தற்போது நடைமுறையில் உள்ள திட்டமே தொடரும்.

அந்தச் சுற்றறிக்கையில், “2026–27 கல்வியாண்டில் ஒன்பதாம் வகுப்பில் பயின்று, 2027–28 கல்வியாண்டில் பத்தாம் வகுப்புக்குச் செல்லும் மாணவர்களுக்கு, தொழிற்கல்வி (Vocational Education) ஒரு கட்டாயப் பாடமாகத் தொடர்ந்து இருக்கும். இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய, மாணவர்கள் ‘கௌசல் விகாஸ்’ (Kaushal Vikas) பாடத்தையோ அல்லது வாரியத்தால் அறிவிக்கப்பட்ட 22 திறன் சார்ந்த பாடங்களில் (Skill Subjects) ஏதேனும் ஒன்றையோ தேர்வு செய்து கொள்ளலாம்...” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வாடிப்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி
மதுரை மாவட்டம்

ஆறாவது நிதிக்குழு பள்ளி மேம்பாட்டு மானியத் திட்டம்

ந.க.எண்.198/2026.த.எ. நாள்.26.10.2026

ஒப்பந்தப்புள்ளி விளம்பரம்

வாடிப்பட்டி பேரூராட்சியில் 2026–2027 ஆம் ஆண்டு ஆறாவது நிதிக்குழு பள்ளி மேம்பாட்டு மானியத் திட்டத்தின் கீழ் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணியினை செய்வதற்கு தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு 16.11.2026 தேதி திங்கள்கிழமை மாலை 3.00 மணிவரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புவோர் பணிவாரியான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை http://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். இந்த இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளிக்கள் குறித்த முழு விபரங்களும் பெறலாம். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 16.11.2026 ஆம் தேதி திங்கள்கிழமை மாலை 3.30 மணிக்கு திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் பொழுது அதற்குரிய வைப்புத் தொகையினை பேரூராட்சி வங்கி கணக்கு எண். 2110677777 IFS Code CBIN0282155 RTGS, முறையில் இணைய வழி செலுத்திடவும். மேலும் இதர விபரங்களை அலுவலக நேரங்களில் பேரூராட்சி அலுவலகத்தில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

வ எண்	ஒப்பந்தப்புள்ளி விளம்பரம்	உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில்	வைப்புத் தொகை ரூ.	காலம்
1.	வார்டு எண். 2, குலசேகரன்கோட்டையில் புதிதாக அங்கன்வாடி மையம் கட்டுதல்	17.00	17,000	90 நாட்கள்

ஒப்பந்தப்புள்ளி தொடர்பான நிபந்தனைகள் வேலை நேரங்களில் பேரூராட்சி அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

(ஒம்) திரு.மு. பால்பாண்டியன்,
பேரூராட்சி மன்றத் தலைவர்,
வாடிப்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி
மதுரை மாவட்டம்.

(ஒம்) ந.ஆளவந்தார்,
செயல் அலுவலர்,
வாடிப்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி
மதுரை மாவட்டம்.

வெ.ஆ.எண். 223/செ.ம.தொ.அ/ மதுரை/ நாள்: 29.10.2026

வேலை வாய்ப்பு
தமிழ்நாடு மின்வாரியத்தில் 500 பயிற்சிப் பணியிடங்கள்!

தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தில் (TNPDCL) 500 டிப்ளமோ (தொழில்நுட்ப) பொறியியல் தொழிற்பயிற்சி பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியாகியுள்ளது. தேர்வு செய்யப்படுவோருக்கு ஓராண்டு பயிற்சி வழங்கப்படும். தமிழ்நாடு முழுவதும் பணியிடங்கள் ஒதுக்கப்படும்.

விண்ணப்பப் பதிவு அக்டோபர் 28–ஆம் தேதி தொடங்கியுள்ளது. நவம்பர் 28, 2026 விண்ணப்பிக்க கடைசி நாளாகும். தகுதியுள்ளவர்கள் https://nats.education.gov.in/ என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு: வழங்கப்பட்ட அறிவிப்பு விவரங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செய்தி. அதிகாரப்பூர்வ அறிவிப்பில் தகுதிகளைச் சரிபார்க்கவும்.

விமானக் கட்டணம் அதிரடியாக உயர்கிறது!

புதுடெல்லி, அக்.30–

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், விமானப் பயணக் கட்டணத்தை உயர்த்துவதைத் தவிர வேறு வழியில்லை என இண்டிகோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஈரான்அமெரிக்கா மற்றும் ரஷ்யாஉக்ரைன் போர்களால் கச்சா எண்ணெய் விலை பேரலுக்கு 115 டாலரைத் தாண்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. இதனால் விமான எரிபொருள் செலவு அதிகரித்து, விமான நிறுவனங்கள் கடும் நிதி நெருக்கடியைச் சந்தித்து வருகின்றன.

இண்டிகோ நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி வெளியிட்ட அறிவிப்பில், ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட செலவுக் குறைப்பு நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை என்றும், விமானக் கட்டணத்தை உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் காலாண்டில் இண்டிகோ நிறுவனத்தின் எரிபொருள் செலவு 67.2 சதவீதம் உயர்ந்து ரூ.9,966.8 கோடியாக அதிகரித்துள்ளது. மொத்த வருமானம் ரூ.24,311.9 கோடியாக உயர்ந்தபோதிலும், செலவுகள் ரூ.26,188.4 கோடியாக அதிகரித்ததால் ரூ.1,879.1 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் விலை உயர்வுடன் இந்திய ரூபாயின் மதிப்புச் சரிவும் நிறுவனத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. விமானச் சேவைகளை மறுஆய்வு செய்து செலவுகளைக் குறைக்கவும் இண்டிகோ திட்டமிட்டுள்ளது. கட்டண உயர்வு நடைமுறைக்கு வரும் தேதி மற்றும் உயர்வு விவரம் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

இன்றைய கார்ட்டூன்

தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கைச் சீரழித்துவிட்டது சோப்ளாங்கி தவெக அரசு: மு.க.ஸ்டாலின்!

சென்னை, அக். 30–

சொந்த புத்தியும் இல்லாமல், சொல் புத்தியும் இல்லாமல் சட்டம்– ஒழுங்கைச் சீரழித்துவிட்ட சோப்ளாங்கி தவெக அரசு. முதலமைச்சரையும் தூங்கி வழியும் ஆட்சி நிர்வாகத்தையும் எழுப்ப முயற்சிப்போம்! ஆளத் தெரியாத அரசுக்குப் பாடம் புகட்டுவோம். நாளை திமுக அரசு நடத்தவுள்ள ஆர்ப்பாட்டம், தறிகெட்டு ஓடும் த.வெ.க அரசுக்கான Wake–up call'' என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திமுக மகளிர் அணி சார்பில் நாளை, தவெக அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. திமுக தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின். இதுதொடர்பாகப் பேசி வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார் பெண்களைத் த.வெ.க அரசு காப்பாற்ற வேண்டிய அவசியமில்லை. மாறாக, த.வெ.க கட்சியை விட்டே பெண்களைக் காப்பாற்ற வேண்டிய ஆபத்தான சூழல்தான் இப்போது நிலவுகிறது. மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முதலமைச்சர் வேறு எங்குமே தேடிப் போகத் தேவையில்லை; தன் சொந்தக் கட்சியில் இருப்பவர்களைக் கட்டுப்படுத்தினாலே மாநிலத்தில் நடக்கும் குற்றங்கள் பாதியாகக் குறைந்துவிடும்'' என்று மு.க.ஸ்டாலின் சாடியுள்ளார்.

மாநிலத்தில் குற்றவாளிகளுக்குச் சிறிதும் சட்டம் குறித்த பயம் இல்லை என்றும், இந்த ஆட்சியைத் தங்களுக்குச் சாதகமான ஒரு 'கிரிமினல் கொண்டாட்ட ஆட்சியாக' அவர்கள் கருதுவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். "தலைநகர் சென்னையின் முக்கியப் பகுதிகளிலேயே கொலைகள் அரங்கேறுகின்றன. நீதிமன்றத்தில் ஜாமினில் வெளியே வரும் குற்றவாளிகள், காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டுவிட்டு வெளியே வரும்போதே ஓட ஓட விரட்டிப் படுகொலை செய்யப்படுகின்றனர்'' என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ந்து அரசை விளாசியுள்ள அவர், "ஓட ஓட விரட்டிக் கொலைகள் நடப்பது, சிறைக் கைதிகள் தப்புவது, சிறுமிகள் மாயமாவது, பகிரங்கமாகக் கொலை செய்துவிட்டுச் குற்றவாளிகள் சாதாரணமாக நடந்து செல்லும் சிசிடிவி காட்சிகளை எல்லாம் முதலமைச்சர் பார்க்கிறாரா இல்லையா? இந்தச் செய்திகள் எல்லாம் அவர் காதுக்கு எட்டவில்லையா? எதுவுமே நடக்காதது போல அவரது செயல்பாடு இருப்பதுடன், எந்தவிதமான பொறுப்புள்ள பதிலும் அரசிடமிருந்து இல்லை'' என்று கொந்தளித்துள்ளார்.

திமுக தலைவர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள பதிவில், "சொந்த புத்தியும் இல்லாமல், சொல் புத்தியும் இல்லாமல் சட்டம் – ஒழுங்கைச் சீரழித்துவிட்ட சோப்ளாங்கி த.வெ.க அரசு! நாளை திமுக அரசு நடத்தவுள்ள ஆர்ப்பாட்டம், தறிகெட்டு ஓடும் த.வெ.க அரசுக்கான Wake–up call! முதலமைச்சரையும் தூங்கி வழியும் ஆட்சி நிர்வாகத்தையும் எழுப்ப முயற்சிப்போம்! ஆளத் தெரியாத அரசுக்குப் பாடம் புகட்டுவோம்!'' எனத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில், சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண்கள்– குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வை கண்டித்து திமுக மகளிர் அணி சார்பில் நாளை (அக்.31) கண்டன ஆர்ப்பாட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. திமுக தலைமைக்கழகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "தமிழகத்தில் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை ஆகியவை அதிகரித்து சட்டம் ஒழுங்கு பெரியளவில் சீர்கேட்டு இருப்பதோடு, பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகள் கடத்தல் ஆகியவை மிகப்பெரிய அளவில் அதிகரித்து தமிழகத்தை பாதுகாப்பற்ற மாநிலமாக இந்த ஆட்சி கொண்டு வந்திருக்கிறது.

ஒரு பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தை படுகுழியில் தள்ளி உள்ள தவெக அரசை கண்டித்து திமுக மகளிர் அணியின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் 31.10.2026 சனிக்கிழமை காலை 10 மணியளவில் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நடைபெறும் என்று திமுக தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.

அந்தந்த மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்கள் தலைமையில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கண்டன உரையாற்றுபவர்கள் விவரமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னை வடக்கில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று கனிமொழி எம்.பி கண்டன உரையாற்றுகிறார்!'' என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரபதிவு; தட்கல் பிரீமியம் உயர்வு?

சென்னை, அக். 30–

வழக்கமான சேவை மற்றும் தட்கல் வழக்கமான சேவைகளில் வசூலிக்கப்படும் தொகையில் 80 சதவீதம் அரசுக்கும், 20 சதவீதம் தனியாருக்கும், பிரீமியம் சேவையில் அரசுக்கும்– தனியாருக்கும் தலா 50 சதவீதம் பகிரப்படும்.

தமிழகத்தில் முதல் கட்டமாக 5 இடங்களில் மாதிரி ஆவணப் பதிவு மையங்களை அமைக்க ரூ.7 கோடியே 84 லட்சத்து 15 ஆயிரத்து 236 நிதி ஒதுக்கீடு செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பாக வணிகவரி மற்றும் பதிவுத்துறை வெளியிட்டுள்ள அரசாணையில் கூறப்பட்டுள்ளதாவது:–

தற்போது சொத்து ஆவணப் பதிவு மற்றும் திருமணப் பதிவு ஆகியவை தொடர்புடைய சார் பதிவாளர் அலுவலகங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நடைமுறையை எளிமைப்படுத்தும் வகையில், ஒரு பதிவு மாவட்டத்துக்குள் பொது மக்கள் தங்களுக்கு வசதியான மாதிரி ஆவணப்பதிவு மையத்தில் ஆவணங்களைப் பதிவு செய்யும் வசதியை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி, முதல் கட்டமாக சென்னை வடக்கு, சென்னை மத்திய, சென்னை தெற்கு, செங்கல்பட்டு மற்றும் கோவை வடக்கு ஆகிய 5 பதிவு மாவட்டங்களில் மாதிரி ஆவணப் பதிவு மையங்கள் அமைக்கப்பட உள்ளன. இவற்றின் செயல்பாடுகள் மதிப்பீடு செய்யப்பட்ட பிறகு, மேலும் 20 இடங்களுக்கு இந்த திட்டம் விரிவுபடுத்தப்படும். இந்த மையங்களை அமைத்தல், தேவையான வசதிகளை ஏற்படுத்துதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளுக்காகத் தனியார் சேவை வழங்குனர் ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள். அதற்கான ஒப்பந்தக் காலம் 5 ஆண்டுகளாகும்.

இந்த புதிய மாதிரி ஆவணப் பதிவு மையங்களில் வழக்கமான சேவை, தட்கல் வழக்கமான சேவை, பிரீமியம் சேவை, தட்கல் பிரீமியம் சேவை என 4 வகையான சேவைகளுக்கு கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அதாவது இந்த மையத்தில் ஒரு ஆவணம் அல்லது திருமணப் பதிவுக்கு வழக்கமான சேவைக்கு ரூ.2,000–ம், தட்கல் வழக்கமான சேவைக்கு ரூ.5 ஆயிரமும், பிரீமியம் சேவைக்கு ரூ.5 ஆயிரமும், தட்கல் பிரீமியம் சேவைக்கு ரூ.10,000 ஆயிரமும் கட்டணம் ஆகும். இந்த கட்டணம், மாதிரி ஆவணப் பதிவு மையங்களில் சேவை வழங்குவதற்கான வசதிக் கட்டணங்கள் மட்டுமே. இதனுடன் பொருந்தக் கூடிய முத்திரைத்தாள் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்களையும் பொதுமக்கள் எப்போதும் போல் செலுத்த வேண்டும்.

இந்த புதிய மையங்களில் வசூலிக்கப்படும் வசதிக் கட்டண வருவாயை அரசு மற்றும் மையங்களை இயக்கும் தனியார் இடையே பகிரப்படும். அதன்படி வழக்கமான சேவை மற்றும் தட்கல் வழக்கமான சேவைகளில் வசூலிக்கப்படும் தொகையில் 80 சதவீதம் அரசுக்கும், 20 சதவீதம் தனியாருக்கும், பிரீமியம் சேவையில் அரசுக்கும்– தனியாருக்கும் தலா 50 சதவீதம் பகிரப்படும். தட்கல் பிரீமியம் சேவையில் 65 சதவீதம் அரசுக்கும், 35 சதவீதம் தனியாருக்கும் பகிரப்படும். இவ்வாறு அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீனாட்சி அம்மன் கோவிலில் மின்தடை ஏன்? - அமைச்சர் நிர்மல்குமார் விளக்கம்!

ராமநாதபுரம், அக். 30–

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் ஜெயந்தியொட்டி மதுரை கோரிப்பாளையத்தில் உள்ள அவரது சிலைக்கு அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். அந்த வகையில், தேவர் சிலைக்கு அமைச்சர்கள் நிர்மல்குமார், ராஜீவ், மதன் ராஜா ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதன்பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் நிர்மல்குமாரிடம், மதுரை மீனாட்சி அம்மன் கோவில் மின்தடை ஏற்பட்டது குறித்து கேட்கப்பட்ட கேள்விக்க அவர் கூறியதாவது:–

முக்கிய பிரமுகர்கள் வருகையை முன்னிட்டு, மீனாட்சி அம்மன் கோவிலில் பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனால் நேற்று ஜெனரேட்டர் மூலம்கோவிலும் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. எடப்பாடி பழனிசாமி வந்தபோது ஏற்பட்ட மின்தடை, ஜெனரேட்டர் இயக்குவது தொடர்பான தகவல் பரிமாற்றக் குறைபாட்டால் நிகழ்ந்தது.

சட்டத்துறை, மின்சாரத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உள்ள குறைகளை சரிசெய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் அனைத்துக் குறைகளும் சரிசெய்யப்படும் என்றார்.

தைவான் விமானங்களுக்கு பாகிஸ்தான் வான்வெளியில் பறக்க அனுமதி!

இஸ்லாமாபாத், அக். 30–

சீனாவுக்கும் தைவானுக்கும் இடையே நீண்ட காலமாகவே எல்லைப் பிரச்சினை நீடித்து வருகிறது. தைவானைத் தனது நாட்டின் ஒரு பகுதி என்றே சீனா உரிமை கொண்டாடி வருகிறது. சீனாவின் மிக நெருங்கிய நட்பு நாடான பாகிஸ்தானும், சீனாவின் இந்த 'ஒரே சீனா' கொள்கையை ஆதரித்து வருகிறது.

இந்தச் சூழ்நிலையில், சீனாவுக்கு ஆதரவாகத் தைவான் நாட்டு விமானங்கள் தனது வான்வெளியில் பறக்கப் பாகிஸ்தான் அரசு திடீர் தடை விதித்ததாகச் செய்திகள் வெளியாகி உலக அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. ஆனால், இந்தச் சர்ச்சை வெடித்த சில மணி நேரங்களிலேயே பாகிஸ்தான் அரசு அதிரடி உத்தரவு ஒன்றை பிறப்பித்தது.

அதன்படி, தைவானின் முன்னணி விமான நிறுவனங்களான 'ஈவிஏ ஏர்' மற்றும் 'சீனா ஏர்லைன்ஸ்' ஆகியவற்றுக்குத் தங்கள் நாட்டு வான்வெளியைப்பயன்படுத்தப் பாகிஸ்தான் சிவில் விமான போக்குவரத்து வாரியம் அதிகாரப்பூர்வமாக ஒப்புதல் அளித்துள்ளது. இந்த அனுமதியின்படி, தைவான் நாட்டுப் பயணிகள் மற்றும் சரக்கு விமானங்கள் வருகிற 2027 மார்ச் 27–ந்தேதி வரை பாகிஸ்தான் வான்வழியாக தடையின்றிப் பறக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

டாஸ்மாக் மதுபாட்டில்களின் விலை உயர்த்தப்படவில்லை - அமைச்சர் விக்னேஷ்!

சென்னை, அக். 30–

தமிழகத்தில் மதுபாட்டில்களுக்கு சுற்றுச்சூழல் மற்றும் சமூக நலக் கட்டணமாக ரூ.10 விதிக்கப்பட்டுள்ளது. இதனால் நவம்பர் 1–ந்தேதி முதல் மதுபாட்டில்களின் அதிகபட்ச சில்லறை விலை (எம்.ஆர்.பி.) ரூ.10 உயர்கிறது.

இந்த கட்டண உயர்வு பீர், ஒயின், வெளிநாட்டு மதுபானங்கள் மற்றும் பிற மாநிலங்களில் இருந்து'1 கொண்டுவரப்படும் மதுபானங்கள் என அனைத்து வகை மதுபானங்களுக்கும் பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தமிழகத்தில் மதுபானங்களின் விலை உயர்த்தப்படவில்லை என்று மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் விக்னேஷ் விளக்கம் அளித்துள்ளார்.

மதுபாட்டில்களின் எம்.ஆர்.பி. விலையில் சேர்க்கப்படும் ரூ.10, காலி பாட்டிலை திருப்பி ஒப்படைக்கும்போது நுகர்வோருக்கு மீண்டும் வழங்கப்படும். பாட்டில்களை திருப்பி ஒப்படைக்காதவர்களிடம் இருந்து வசூலிக்கப்படும் தொகை அரசுக்கு சேரும்.

தற்போது விற்பனை செய்யப்படும் மதுபாட்டில்களில் 60 சதவீதம் மட்டுமே திரும்ப ஒப்படைக்கப்படுகின்றன. மீதமுள்ள 40 சதவீத பாட்டில்கள் திரும்ப வருவதில்லை.

எனவே, மதுபானங்களின் விலை உயர்த்தப்படவில்லை. பாட்டில்களை திருப்பி வழங்குவதற்கான கட்டண நடைமுறையே கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

அதிரடியாகக் குறைந்த தங்கம் விலை!

சென்னை, அக். 30–

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று (அக். 30, வெள்ளிக்கிழமை) சவரனுக்கு ரூ. 1,240 குறைந்து ஒரு சவரன் ரூ. 1,04,320 –க்கும் கிராமுக்கு ரூ. 155 குறைந்து ஒரு கிராம் ரூ. 13,040 –க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையும் இன்று குறைந்துள்ளது. ஒரு கிராம் ரூ. 5 குறைந்து ரூ. 210 –க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ. 10,000 குறைந்து ரூ. 2.10 லட்சத்துக்கும் விற்பனையாகிறது.

சினிமா துளிகள்..!

உலக சினிமா செய்திகள்!

கோலிவுட் தமிழ் சினிமா

1. ரூ.755 கோடி வசூல்! சாதனை படைக்கும் ரஜினியின் 'ஜெயிலர் 2'!

ரஜினிகாந்த் நடித்த 'ஜெயிலர் 2' திரைப்படம் உலகளவில் ரூ.755 கோடி வசூலித்துள்ளதாக அக்டோபர் 29ஆம் தேதி வெளியான தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழ் சினிமாவின் அதிக வசூல் படங்களில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

2. நவம்பர் 12–ல் அஜித்தின் புதிய படப்பிடிப்பு!

அஜித்குமார் நடிக்கும் 'டேர்டெவில்' திரைப்படத்தின் படப்பிடிப்பு நவம்பர் 12ஆம் தேதி தொடங்கும் என இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. v

3. தனுஷின் 'ஓம்' படத்தில் சாய் பல்லவி போலீஸ் அதிகாரி!

ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் உருவாகும் 'ஓம்: அத்தியாயம் 1' திரைப்படத்தில் சாய் பல்லவி நித்யா ரெட்டி என்ற ஐபிஎஸ் அதிகாரியாக நடிக்கிறார். படம் தனித்த கதையாக இருக்கும் என்றும் இயக்குநர் விளக்கியுள்ளார்.

4. 'மூக்குத்தி அம்மன் 2' குறித்து நயன்தாரா நெகிழ்ச்சி!

'மூக்குத்தி அம்மன் 2' தனது மனதுக்கு நெருக்கமான திரைப்படம் என்று நயன்தாரா தெரிவித்துள்ளார். முதல் பாகத்துடன் இரண்டாம் பாகத்திற்குக் கதைத்தொடர்பு இல்லை என இயக்குநர் சுந்தர் சி. கூறியுள்ளார்.

5. மேலும், சூர்யாவின் 'சீன்' படத்தின் புதிய காட்சிகள் வெளியாகியுள்ளன. சிவகார்த்திகேயன் தனது கைவசம் ஏழு திரைப்படத் திட்டங்கள் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

பாலிவுட் இந்தி சினிமா

5. ஷாருக்கான்சுஹானா இணையும் 'கிங்'! பிரம்மாண்ட சண்டைக் காட்சி!

ஷாருக்கானும் அவரது மகள் சுஹானா கானும் நடிக்கும் 'கிங்' திரைப்படத்தில் 100–க்கும் மேற்பட்ட சண்டைக் கலைஞர்கள் பங்கேற்கும் பிரம்மாண்டமான சண்டைக் காட்சி உருவாகி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

6. வசூலில் முன்னேறும் 'உட்தா தீர்'!

ஆயுஷ்மான் குரானா, சாரா அலி கான் நடித்த 'உட்தா தீர்' திரைப்படம் அக்டோபர் 23ஆம் தேதி வெளியானது. ஆறாவது நாளில் உலகளவில் ரூ.50 கோடி வசூலை நெருங்குவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

டோலிவுட் தெலுங்கு சினிமா

7. ரூ.100 கோடியை நோக்கி விஜய் தேவரகொண்டாவின் 'ரணபாலி'!

விஜய் தேவரகொண்டா, ராஷ்மிகா மந்தனா நடித்த 'ரணபாலி' திரைப்படம் வசூலில் ரூ.100 கோடியை நெருங்குவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. ஆங்கிலேயர் ஆட்சிக்காலச் சுரண்டலை எதிர்க்கும் கதைக்களத்தில் படம் உருவாகியுள்ளது.

மாலிவுட் மலையாள சினிமா

8. குஞ்சாக்கோ போபனின் புதிய தோற்றம் வெளியீடு!

அமல் நீரத் இயக்கும் 'பேச்சுலர் பார்ட்டி Deux' திரைப்படத்தில் குஞ்சாக்கோ போபன் நடிக்கும் கதாபாத்திரத்தின் புதிய போஸ்டர்கள் வெளியாகியுள்ளன.

9 ,மேலும், மோகன்லால்அனூப் சத்யன் கூட்டணியின் புதிய படம் தொடங்குவது குறித்த அறிவிப்பும், பிஜு மேனனின் 'அவராச்சன் அண்ட் சன்ஸ்' திரைப்படத்தின் அக்டோபர் 30 ஒடிடி வெளியீட்டுத் தகவலும் வெளியாகியுள்ளன.

சாண்டல்வுட் கன்னட சினிமா

10. 'பிரேமத ஊரலி' படத்திற்கு வசூல் வரவேற்பு!

கன்னடத் திரைப்படமான 'பிரேமத ஊரலி' தொடர்ந்து ஐந்தாவது வாரத்திலும் திரையரங்குகளில் வரவேற்பைப் பெற்று வருகிறது. ரூ.100 கோடி வசூல் மைல்கல்லை எட்டியுள்ளதாகத் திரையுலகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020